(6 pages) **Reg. No. : ....**

Code No. : 8432 **Sub. Code : HTLE 31**

M.A. (CBCS) DEGREE EXAMINATION,
NOVEMBER 2015.

Third Semester

தமிழ்

Elective — கணினியும் ஊடகமும்

(For those who joined in July 2012 and afterwords)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

சரியான விடையைத் தேர்ந்து எழுதுக.

1. எண்ணங்களையும் செயல்களையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தும் தலையாய கருவி

   (அ) தொலைக்காட்சி (ஆ) வானொலி

   (இ) கணிப்பொறி (ஈ) மொழி.

2. தற்காலக் கணிப்பொறி உருவாவதற்கு முன்னோடியாக அமைந்தது

   (அ) குறுக்குச் சட்டம் (ஆ) மணிச்சட்டம்

   (இ) நேப்பியர் கட்டம் (ஈ) பகுப்பாய்வுக் கருவி.

3. பேஸிக் மொழி வழியமைப்புச் செயற்படும் பொழுது கணக்கின் திண்மைக்கேற்ப மதிப்பினைச் சுட்டுவது

   (அ) மாறிலிகள் (ஆ) இயக்கிகள்

   (இ) குறிகள் (ஈ) மாறிகள்.

4. கணிப்பொறியில் வழியமைப்பாளர்கள் பயன்படுத்தும் மொழியின் பிரிவுகள்

   (அ) ஒன்று (ஆ) இரண்டு

   (இ) மூன்று (ஈ) நான்கு.

5. NASA – நாசா National Aeronautics and Space Administration என்ற அமைப்பு எந்நாட்டிற்குரியது?

   (அ) சப்பான் (ஆ) பாகிஸ்தான்

   (இ) அமெரிக்கா (ஈ) இலங்கை.

6. MICR – காந்தமைக் குறியீடு அறிமுறை (Magnetic Ink Character Recognition Technique) பயன்படும் துறை

   (அ) காவல் மற்றும் பாதுகாப்பு

   (ஆ) தொலைதொடர்பு

   (இ) வங்கி மற்றும் எல் ஐ சி

   (ஈ) வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனம்.

Nesamony Memorial Christian College, Marthandam

7. வானொலியைக் கண்டுபிடித்தவர்

(அ) பியர்ட் (ஆ) டாட்டா

(இ) பர்லோ (ஈ) மார்க்கோனி.

8. உயர் கல்வியைத் தொலைக்காட்சியின் மூலமாகப் பரப்புவதற்குச் சிபாரிசு செய்த கமிட்டி

(அ) ஆகாஸ் பாரதி கமிட்டி

(ஆ) சந்தா கமிட்டி

(இ) வர்கீஸ் கமிட்டி

(ஈ) மாநிலக் கமிட்டி.

9. இணையத்தை நேரடியாகப் பயன்படுத்துவதற்கு உதவுவது

(அ) கணினி வரைவாளர்

(ஆ) நிலைய உதவியாளர்

(இ) மின் பகிர்மானர்

(ஈ) இணையச் சேவையாளர்.

10. எச்சூழலிலும் எவ்விடத்திலும் தாமதமின்றி உடனுக்குடன் செய்தியை ஒலி எழுப்பித் தெரிவிக்கும் மின்னணுக் கருவி

(அ) கணிப்பொறி (ஆ) முகநூல்

(இ) பேஜர் (ஈ) செல்போன்.

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

11. (அ) கணிப்பொறியின் உட்பாட்டுச் சாதனங்களைக் கூறுக.

(அல்லது)

(ஆ) கணிப்பொறித் தலைமுறைகள் பற்றி எழுதுக.

12. (அ) இயக்கிகள் – விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) மாற்றிகள் பற்றிக் கூறுக.

13. (அ) போக்குவரத்துப் பயன்பாட்டிற்கு கணினியை எவ்வாறு உபயோகிக்கின்றனர்? கூறுக.

(அல்லது)

(ஆ) விண்வெளி ஆய்வில் கணினியின் பங்கு குறித்து எழுதுக.

14. (அ) வானொலி நிகழ்ச்சிகளில் ஏதேனும் ஒன்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படும் விதத்தைக் கூறுக.

Nesamony Memorial Christian College, Marthandam

15. (அ) வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பில் இணையத்தின் பங்கினைக் கூறுக.

(அல்லது)

(ஆ) தமிழ்மொழிப் பயன்பாட்டில் இணையத்தின் பங்கு எத்தகையது? கூறுக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடை தருக.

16. (அ) கணிப்பதற்காகத் தோற்றம் கண்ட சாதனங்களின் வரலாற்றினைக் கூறுக.

(அல்லது)

(ஆ) கணிப்பொறியின் தேவை நாளுக்கு நாள் வளர்ச்சி பெறுபனவற்றை ஆராய்க.

17. (அ) கணிப்பொறிகளில் உயர்நிலை மொழிகளின் தேவை பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) மொழிகளைப் பதிவு செய்தலும் மாற்றம் செய்தலும் எவ்வாறமைகின்றன? கூறுக.

18. (அ) வாணிகத்திலும் தொழில் துறையிலும் கணிப்பொறிகள் எவ்வாறு பயன்படுகின்றன? விளக்குக.

(அல்லது)

(ஆ) மருத்துவ உலகில் கணிப்பொறியின் இன்றியமையாமை குறித்தெழுதுக.

19. (அ) பண்பலை ஒலிபரப்பு பற்றி விளக்கமாகக் கூறுக.

(அல்லது)

(ஆ) தொலைக்காட்சியின் இன்றியமையாமையினை விளக்குக.

20. (அ) பல்வேறு துறைகளில் இணையத்தின் பயன்பாட்டினை விளக்கமாக எழுதுக.

(அல்லது)

(ஆ) இணையத்தின் இணைப்புக்குத் தேவையானவற்றைக் கூறுக.

———————

Nesamony Memorial Christian College, Marthandam